நீதிமன்றத்தின் தலையீட்டாலும், கர்நாடகா ஓரளவு தண்ணீரை விடுவிக்க கட்டாயப்படுத்தப்பட்டு தமிழகத்திற்குத் தண்ணீர் கிடைக்கப் பெற்றுள்ளது என்பதை இத்தருணத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) தமிழகத்திற்கு உரிமைப்படி கிடைக்க வேண்டிய தண்ணீரை கர்நாடகத்திடமிருந்து பெறுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன என்பதையும், உச்ச நீதிமன்றத்தின்மூலம் தமிழகத்திற்குத் தேவையான தண்ணீர் கிடைக்கும் என்ற எனது நம்பிக்கையையும் தெரிவித்து அமர்கிறேன்.

பிற்பகல் 12-35

5. அறிக்கைகள் அளித்தல்

(அ) பொதுக் கணக்குக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: குழுக்களின் அறிக்கைகள் அளித்தல். பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. ச. இராமச்சந்திரன், பொதுக் கணக்குக் குழுவின் தலைவர் அவர்கள்.

திரு. ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2012—2013 ஆம் ஆண்டிற்கான பொதுக் கணக்குக் குழுவின் 61 முதல் 72 வரையிலான பன்னிரெண்டு அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

(ஆ) பொது நிறுவனங்கள் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. வி. சோமசுந்தரம், பொது நிறுவனங்கள் குழுவின் தலைவர் அவர்கள்.

திரு. வி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியத் துணைக் கண்டத்தில் எந்த முதலமைச்சரும் செய்யாத வகையில் தமிழகத்திலுள்ள அனைத்து சீருடைப் பணியாளர்களும் பயன்பெறும் வகையில் குறைந்த விலையில் பொருள் வாங்க சிறப்பு அங்காடிகளை உருவாக்கியும், இடர் படி, உணவுப் படிகளை உயர்த்தியும், அவர்களுக்கு 'உங்கள் சொந்த இல்லம்' என்ற திட்டத்தினை உருவாக்கி, அதன்மூலம் 2,673

[திரு. வி. சோமசுந்தரம்] [2012 நவம்பர் 2

வீடுகளுக்குத் தங்கள் திருக்கரங்களால் அடிக்கல் நாட்டியும், ஒதுக்கீடு ஆணைகளை வழங்கியும், காவலர்களுக்கே காவல் தெய்வமாக விளங்கிக் கொண்டிருக்கின்ற (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்பாதங்களை வணங்கி, 2012—2013 ஆம் ஆண்டிற்கான பொது நிறுவனங்கள் குழுவின் 37 முதல் 42 வரையிலான ஆறு அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

(இ) அரசு உறுதிமொழிக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அரசு உறுதிமொழிக் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர்.பி. உதயகுமார், அரசு உறுதிமொழிக் குழுவின் தலைவர் அவர்கள்.

திரு. ஆர்.பி. உதயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாடிய பயிருக்கு வான் மழைபோல், நாடிய மனிதருக்கெல்லாம் வாழ்வளிக்கும் ஒளி விளக்கே, கேடு நினைக்கும் வீணர்களைச் சுட்டெரிக்கும் சுடர் விளக்கே, தீய சக்திகளால் இருண்டுபோன தமிழகத்திற்கு புத்தொளி பாய்ச்சிட புதுப்புது உறுதியான திட்டங்களைச் செயல்படுத்தி வருகின்ற தெய்வ சக்தியே, தொட்டதெல்லாம் துலங்க வைக்கும் வெற்றித் திருமகளே, பட்டமரத்தையும் தளிர்க்க வைக்கும் தெய்வத் திருமகளே, எதிரிகளைத் தொடை நடுங்க பகை முடிக்கும் வீரத் திருமகளே, நல்லோரை வாழவைத்திட, தீயோரை அழித்திட, திக்கற்றோரின் துயர் துடைத்திட, காலம் நமக்குத் தந்திட்ட அருட்கொடையாம் ஆயிரம் கண்ணுடை அன்புத் தாயே, நாள்தோறும், நாள்தோறும், துறைதோறும், துறைதோறும் புதுமைகள் படைத்து வருகின்ற புறநானூற்றுத் தாயே, தமிழ்நாடு சிறப்புக் காவல் இளைஞர் படை என்கின்ற சீறிப் பாயும் இளம் சிங்கங்களின் சிறப்புப் படை அமைத்து இளைஞர்களின் வாழ்வில் ஒளி ஏற்றிவைத்திட்ட இளைய சமுதாயத்தின் விடிவெள்ளியே, அம்பானி வீட்டுப் பிள்ளைகளுக்கும் கிடைத்திடாத வகை, வகையான அறுசுவை உணவுகளையும், சாமானிய வீட்டுக் குழந்தைகளுக்கும் வாரி வழங்கியிருக்கின்ற அன்னபூரணியே, (மேசையைத் தட்டும் ஒலி) நம்பினோர் கெடுவதில்லை, இது நான்கு மறை தீர்ப்பு; ஆம், வாழும் மனித தெய்வம் நம் அம்மா அவர்களை நம்பினோர் யாரும் கெட்டதில்லை, இது சத்தியத்தின் தீர்ப்பு. கடைக்கோடி சாதாரண சாமானியத் தொண்டனான எனக்கு அரசு